### விண்வெளித் துறையில் செயல்படுத்தப்பட்டு வரும்

# நீலப் பறவை செயற்கை கோள் திட்டம் வெற்றிகரமான முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளதா?

## மாநிலங்களவையில் எஸ்.ஆர்.சிவலிங்கம் கேள்வி!



புதுடெல்லி, ஆக. 11 -

திராவிட முன்னேற்ற கழக மேலவை உறுப்பினர் எஸ். ஆர். சிவலிங்கம் மாநிலங்களவையில் 6 ஆகஸ்ட் 2026 அன்று விண்வெளித் துறையில் செயல் படுத்தப் பட்டு வரும் நீலப் பறவை செயற்கை கோள் திட்டம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளதா? என்றும் சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிறுவனங்களுடன் ஒன்றிய அரசின் ஒத்துழைப்பை பெருக்கிட ஏதேனும் திட்டங்கள் உள்ளதா? தனியார் பங்களிப்பை விண்வெளித் துறையில் அதிகரிக்கும் செயல் வடிவம் அரசிடம் உள்ளதா? என்றும் ஒன்றிய அரசின் விண்வெளி ஆராய்ச்சித்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

அமெரிக்க விண்வெளித் துறையின் ஒத்துழைப் போடு LVMJ செயற்கை கோள் திட்டத்தின் படி 6100 கிலோ எடையுள்ள செயற்கைக் கோளில் 520 கிலோ மீட்டர் உயரத்தில், இந்தியாவிலிருந்து ஏவப் பட்டன என்றும், செயற்கை; கோள் செலுத்தும் தொழில் நுட்பத்தில் இந்தியா முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது என்றும், வருகின்ற 2047ஆம் ஆண்டிற்குள் சர்வதேச விண்வெளி ஒத்துழைப்பில் இந்தியாவின் விண்வெளித் துறை முக்கியமான மைல் கல்லை எட்டிப்பிடிப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் ஒன்றிய அரசு எடுத்து வருகிறது என்றும், மனிதர்களை விண்வெளிக்கு அனுப்புவது, விண்வெளியில் ஆராய்ச்சி மையம் ஏற்படுத்துவது போன்ற அனைத்து துறைகளிலும் மற்ற நாடுகளுடன் இணைந்து இந்தியா செயல்படும் என்று இணையமைச்சர் மாநிலங்களவையில் தெரிவித்தார்.

தமிழ்நாட்டின் குலசேகரப்பட்டினத்தில் இரண்டாவது ஏவுத்தளம் அமைத்து விண்வெளி கட்டமைப்புகளை வலுப்படுத்துதல், இந்திய தரக் கட்டுப்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து இந்திய விண்வெளி தரக் கட்டுபாட்டுகளை ஏற்படுத்துதல், ஸ்கைரூட்,

அக்னிகூல், இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் போன்ற நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுதல், வெளிநாட்டு நேரடி முதலீட்டை விண்வெளித் துறையில் அதிகரித்தல், 1000 கோடி ரூபாய்க்கான விண்வெளி நிதியம் ஒன்றை ஏற்படுத்துதல் 2047ஆம் ஆண்டிற்குள் செயல்படுத்த அனைத்து முயற்சிகளையும் ஒன்றிய அரசு எடுத்து வருகிறது என்று ஒன்றிய அரசின் விண்வெளி ஆராய்ச்சித்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் அவர்கள், மாநிலங்களவையில் திராவிட முன்னேற்ற கழக மேலவை உறுப்பினர் எஸ். ஆர். சிவலிங்கம் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

---

### சிறுபான்மையினருக்கு எதிரான வெறுப்புப் பேச்சு – தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்துள்ளதா என்பதை அறிய

# தேசிய சிறுபான்மையினர் ஆணையம் ஏதேனும் ஆய்வுகள் மேற்கொண்டுள்ளதா?

## மாநிலங்களவையில் கவிஞர் சல்மா கேள்வி!



புதுடெல்லி, ஆக.11 -

சமீப ஆண்டுகளில் சிறுபான்மையினருக்கு எதிரான வெறுப்புப் பேச்சு மற்றும் தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்துள்ளதா என்பதை அறிய தேசிய சிறுபான்மையினர் ஆணையம் ஏதேனும் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளதா? என மாநிலங்களவையில் கவிஞர் சல்மா கேள்வி எழுப்பியுள்ளார்.

மாநிலங்களவையில் கவிஞர் சல்மா எழுப்பிய கேள்விகள் வருமாறு:-

2021 ஆம் ஆண்டு முதல் தேசிய சிறுபான்மையினர் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள குறைகள் (Grievances) தொடர்பான பொருள் வாரியான (Subject wise) விவரங்கள் யாவை;

2021 ஆம் ஆண்டு முதல் National Commission for Minoritiesயில் பதிவு செய்யப் பட்டுள்ள குறைகள் தொடர்பான சமூக வாரியான (Communitywise) விவரங்கள் யாவை;

2021 ஆம் ஆண்டு முதல் National Commission for Minoritiesயில் பதிவு செய்யப் பட்டுள்ள குறைகள் தொடர்பான மாநில வாரியான (State wise) விவரங்கள் யாவை?

National Commission for Minoritiesயில் பதிவு செய்யப் பட்ட குறைகளைத் தீர்வு காண (Dispose of) சராசரியாக எவ்வளவு காலம் எடுத்துக்கொள்ளப்படுகிறது; மற்றும் சமீப ஆண்டுகளில் Minoritiesக்கு எதிரான வெறுப்புப் பேச்சு மற்றும் தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்துள்ளதா என்பதை அறிய, தேசிய சிறுபான்மையினர் ஆணையம் ஏதேனும் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளதா?

இவ்வாறு கவிஞர் சல்மா மாநிலங்களவையில் கேள்வி எழுப்பினார்.

---


மாலைமணி பி.எஸ்.இளங்கோ

37-வது ஆண்டு நினைவு நாள்

11.8.1989







எங்கள் இதயத்தை விட்டு நீங்காது

என்றென்றும் எங்களது நினைவில் வாழ்ந்து வரும்

இதய தெய்வத்திற்கு அஞ்சலி!

மகன்: சித்தார்த் இளங்கோ

மனைவி. சகுந்தலா இளங்கோ

மகள்கள்: திருமதி. தமிழ்ச்செல்வி

திருமதி. மணிமேகலை

திருமதி. எழில் திரு. பழனியப்பா

மருமகன்கள்: திரு. பாண்டியன்

திரு. சுதாகர்

மருமகள்: தாட்சாயினி சித்தார்த்

பேரன்கள்: வருண்ராஜ், ஷருண்ராஜ், முகில், தர்ஷன், மௌரியன்

மற்றும் அலுவலக நண்பர்கள்


---

### நோய் கண்காணிப்பு அமைப்புகளை வலுப்படுத்த

# ஒன்றிய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா? அதற்கான திட்ட விவரங்கள் என்ன?

## மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி கேள்வி!



புதுடெல்லி, ஆக. 11 -

டெல்லியில் பாராளுமன்ற மாநிலங்களவை மழைக்கால கூட்டத் தொடர் நடைபெற்று வருகிறது . கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் கலந்து கொண்டு சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சக சுகாதார மற்றும் குடும்ப நலத் துறை நோய் கண்காணிப்பு அமைப்புகளை வலுப்படுத்துதல் குறித்து எழுத்துப்பூர்வமாக கேள்வி எழுப்பினார்.

அதில் நோய் கண்காணிப்பு அமைப்புகளை வலுப்படுத்த ஒன்றிய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா? அது குறித்த விவரங்கள் மற்றும் செயல்படுத்தலின் தற்போதைய நிலை என்ன? இதற்கு சுகாதார மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் பதில் அளிப்பாரா? என கேள்வி எழுப்பினார்.

இதற்கு எழுத்துப்பூர்வமாக பதில் அளித்துள்ள சுகாதார மற்றும் நல அமைச்சகத்தின் இணை அமைச்சர் பிரதாப்ராவ் ஜாதவ், ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்புத் திட்டத்தின் (IDSP) கீழ் நாட்டில் நோய் கண்காணிப்பு அமைப்புகளை வலுப்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளில் கண்காணிப்பு உள்கட்டமைப்பு, ஆய்வக வலைப்பின்னல்கள், நிகழ்வுசார்ந்த கண்காணிப்பு, நோய் பரவல் குறித்த விசாரணை மற்றும் அதற்கான எதிர்வினை வழிமுறைகள் ஆகியவற்றை வலுப்படுத்துதல், கண்காணிப்புப் பணியாளர்களின் திறனை மேம்படுத்துதல் மற்றும் நிகழ்நேரத்திற்கு மிக நெருக்கமான நோய் கண்காணிப்பிற்காக டிஜிட்டல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல் ஆகியவை அடங்கும். மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் செயல்படுத்தலின் தற்போதைய நிலை குறித்த விவரங்கள் இணைப்பில் கொடுக்கப் பட்டுள்ளன.

நோய்த்தொற்று பரவல்கள் குறித்த சரியான நேரத்திலான விசாரணை, இடர் மதிப்பீடு மற்றும் பயனுள்ள கட்டுப்பாடு ஆகியவற்றுக்கு ஆதரவளிக்க, மாவட்ட மற்றும் மாநில அளவில் பல்துறை சார்ந்த விரைவு எதிர்வினைக் குழுக்களும் (RRTs), தேசிய அளவில் 'தேசிய கூட்டு நோய்த்தொற்று எதிர்வினைக் குழுவும்' (NJORT) நிறுவப்பட்டுள்ளன.

நோய் கண்காணிப்பு, நோய்த்தொற்று பரவலைக் கண்டறிதல், அறிக்கை அளித்தல் மற்றும் அதற்கான எதிர்வினை நடவடிக்கைகளை வலுப்படுத்த மருத்துவ அதிகாரிகள், தொற்றுநோயியல் நிபுணர்கள், நுண்ணுயிரியலாளர்கள் மற்றும் கண்காணிப்புப் பணியாளர்களுக்குத் தொடர்ச்சியான பயிற்சித் திட்டங்கள் நடத்தப்படுகின்றன.

'தேசிய ஒன் ஹெல்த் மிஷன்' (NOHM) மூலம் ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்பு முறையை அரசாங்கம் வலுப்படுத்தி வருகிறது. இத்திட்டம் 16 அமைச்சகங்கள் மற்றும் துறைகளுக்கு இடையே ஒருங்கிணைந்த செயல்பாட்டை ஊக்குவிக்கிறது; இதில் சுகாதார ஆராய்ச்சித் துறை (DHR) அல்லது இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் (ICMR) ஆகியவை முதன்மைச் செயலாக்க முகமையாகச் செயல்படுகின்றன.

viii. ஒருங்கிணைந்த 'ஒன் ஹெல்த்' (OneHealth) கண்காணிப்பு குறித்த ஆலோசனை மற்றும் மறுஆய்வுக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது; சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசிய நோய்க் கட்டுப்பாட்டு மையம் (NCDC) இதன் செயலகமாகச் செயல்படுகிறது.

பொது சுகாதார அச்சுறுத்தல்களை முன்கூட்டியே கண்டறிந்து எதிர்கொள்ளும் திறனை வலுப்படுத்தவும், ஒருங்கிணைந்த கண்காணிப்பை மேம்படுத்தவும், குறிப்பிட்ட நோய்கள், கழிவு நீர் மற்றும் மரபணு (genomic) சார்ந்த கண்காணிப்புக்கான முன்னோடித் திட்டங்களை இத்திட்டம் தொடங்கியுள்ளது என ஒன்றிய அமைச்சர் பதிலளித்துள்ளார்.

---

### சிறைகளுக்குள்ளேயே தினசரி நீதித்துறை அணுகலை வழங்குவதற்கான

# நாடு தழுவிய வழிமுறையையும் உச்ச நீதிமன்றம் முன்மொழிந்துள்ளதா?

## மக்களவையில் கோவை – முனைவர் கணபதி ப.ராஜ்குமார் கேள்வி!



புதுடெல்லி, ஆக.11 -

நீதிமன்றங்களில் ஆஜர் படுத்தப்படாத நிலையில், விசாரணைக்கு உட்பட்ட கைதிகள் அரசியலமைப்பு ரீதியான பாதுகாப்புகளை இழக்காமல் இருப்பதை உறுதிசெய்யும் வகையில், நீதிமன்றத்தால் நியமிக்கப் பட்ட நீதிபதிகள் தினமும் சிறைகளைச் சென்று பார்வையிடுவதற்கான ஒரு கொள்கையையும், சிறைகளுக்குள்ளேயே தினசரி நீதித்துறை அணுகலை வழங்குவதற்கான நாடு தழுவிய வழிமுறையையும் உச்ச நீதிமன்றம் முன்மொழிந்துள்ளதா?, அவ்வாறாயின், அது குறித்த விவரங்கள் என்ன என்று கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் கேள்வி எழுப்பினார்.

இதற்கு சட்டம் மற்றும் நீதி அமைச்சகத்தின் இணை அமைச்சர் (தனிப் பொறுப்பு), நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சகத்தின் இணை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் அளித்த பதில் வருமாறு :

சட்ட சேவைகள் அதிகார அமைப்புகள் சட்டம், 1987' இன் கீழ் அமைக்கப் பட்ட தேசிய சட்ட சேவைகள் ஆணையம் (NALSA) இதன் தலைமைப் புரவலராக இந்தியத் தலைமை நீதிபதி உள்ளார்

நாடு முழுவதும் உள்ள விசாரணைக்கு உட்பட்ட கைதிகள் (undertrial prisoners) மற்றும் பிற சிறைவாசிகளுக்கு இலவச மற்றும் திறமையான சட்ட சேவைகளை வழங்கி வருகிறது. 'சட்ட சேவை மையங்கள்' மற்றும் 'சிறை சட்ட உதவி மையங்கள்' (PLACs) மூலமாக விசாரணைக்கு உட்பட்ட கைதிகளுக்கு இலவச சட்ட சேவைகள் அல்லது உதவிகளை வழங்குவதற்கு NALSA பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. மாவட்ட சட்ட சேவைகள் ஆணையத்தின் (DLSA) செயலாளர் மற்றும் அதன் தலைவர் (மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி) ஆகியோர், NALSAவின் நிலையான செயல்பாட்டு நடைமுறைகளின்படி அவ்வப்போது சிறை ஆய்வுகளை மேற்கொள்கின்றனர். கைதிகளுக்கான சட்ட உதவி சேவைகளை அணுகுவதற்கான நடைமுறை மற்றும் சிறைச்சாலை சட்ட உதவி கிளினிக்குகளின் செயல்பாடு, 2022 (SOP2022), திறம்பட சட்ட உதவி வழங்குதல் மற்றும் கைதிகளின் நிறுவன மேற்பார்வை ஆகியவற்றை உறுதிசெய்யும். SOP ஆல் கட்டளையிடப் பட்டபடி, செயலாளர், DLSA ஒவ்வொரு PLACக்கும் குறைந்தபட்சம் ஒவ்வொரு மாதமும் சென்று ஆய்வு செய்து, தகுதியான அனைத்து விசாரணைக் கைதிகளுக்கும் சட்டப்பூர்வ பிரதிநிதித்துவம் வழங்கப்படுவதை உறுதி செய்கிறார், சிறைச்சாலை நிலைமைகளைக் கண்காணிக்கிறார், அல்லாத நிகழ்வுகளை மதிப்பாய்வு செய்கிறார். நீதிமன்றங்களில் கைதிகளை ஆஜர்படுத்துதல் மற்றும் இதில் ஏற்படும் குறைபாடுகளைச் சரிசெய்ய உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகியவை இதில் அடங்கும். போக்குவரத்து அல்லது பிற தடைகள் காரணமாக, விசாரணைக்கு உட்பட்ட கைதிகள் (undertrial prisoners) நேரிலோ அல்லது காணொளிவாயிலாகவோ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படாத நிகழ்வுகளை ஆய்வு செய்யவும், அதற்கான தகுந்த தீர்வு நடவடிக்கைகளைப் பரிந்துரைக்கவும் மாவட்ட அளவில் 'விசாரணைக்கு உட்பட்ட கைதிகள் மறுஆய்வுக் குழுக்கள்' (UTRCs) அமைக்கப்பட்டுள்ளன என்று கூறினார்.

---


திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மயிலை ஆ. சந்திரன்

ஆகஸ்ட் 11 (1996)



இளவயது முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

ஒன்றுபட்ட சென்னை மாவட்டத்தில் பகுதி பிரதிநிதியாகவும் – தென்சென்னை மாவட்டத்தில், வட்டக் கழகச் செயலாளர், மயிலை பகுதிக் கழகச் செயலாளர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.